

விழுப்புரம் – திருச்சி புறவழிச் சாலை, வழுதரெட்டி பகுதியில், புதிதாக அமைக்கப்பட்டு வரும் 21 சமூக நீதி போராளிகள் மற்றும் முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி மணிமண்டபம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர். க.பொன்முடி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சி.பழனி, சட்டமன்ற உறுப்பினர்கள் விழுப்புரம் டாக்டர்.இரா.இலட்சுமணன், விக்கிரவாண்டி அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் க.மும்மூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

### நாளொன்றுக்கு ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோரின் பசியாற்றும் நடவடிக்கை!

# 'அம்மா' உணவகங்களைப் புனரமைக்க ரூ.21 கோடி ஒதுக்கீடு !

## தேனாம்பேட்டை அம்மா உணவக ஆய்வுக்குப்பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூலை 21-**

**அம்மா உணவகங்கள் மூலம் நாளொன்றுக்கு ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோரின் பசியாற்றும் நடவடிக்கைகளை நமது அரசு மேற்கொள்கின்றது என்றும், சென்னையில் உள்ள அம்மா உணவகங்களுக்கு 7 கோடி ரூபாய் மதிப்பில் புதியதாகப் பாத்திரங்கள் மற்றும் சமையல் கருவிகள் வாங்கவும் அம்மா உணவகங்களைப் புனரமைத்திட 14 கோடி ரூபாய் ஒதுக்கவும் உத்தரவிட்டுள்ளேன் என்று தேனாம்பேட்டை அம்மா உணவக ஆய்வுக்குப்பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிந்துள்ள தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

நாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அம்மா உணவகங்களை மூடிவிடுவோம் எனப் புரளிகளைக் கிளப்பியது ஒரு கூட்டம். அவர்களது தீய எண்ணங்களுக்கு இடமளிக்காமல், கடந்த மூன்றாண்டுகளில் 450 கோடி ரூபாய்க்கும் மேல் செலவிட்டு, நாளொன்றுக்கு ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோரின் பசியாற்றும் நடவடிக்கைகளை நமது அரசு மேற்கொண்டிருக்கிறது.

இன்று தேனாம்பேட்டை பகுதியில் உள்ள அம்மா உணவகம் ஒன்றில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, மக்களிடம் உணவின் தரம் குறித்தும்; அங்குள்ள பணியாளர்களிடம் அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தேன்.

அதையொட்டி, சென்னையில் உள்ள அம்மா உணவகங்களுக்கு 7 கோடி ரூபாய் மதிப்பில் புதிதாகப் பாத்திரங்கள் மற்றும் சமையல் கருவிகள் வாங்கவும் - அம்மா உணவகங்களைப் புனரமைத்திட 14 கோடி ரூபாய் ஒதுக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## மக்களவை அலுவல்

# ஆலோசனைக் குழுவில் தயாநிதிமாறன்!

## மக்களவைச் செயலகம் அறிவிப்பு !

**புதுடெல்லி, ஜூலை 21-**

**மக்களவை அலுவல் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக மக்களவைக் கழகக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.**

இதற்கான உத்தரவை மக்களவைச் செயலகம் பிறப்பித்துள்ளது.

இக்குழு மக்களவைக் கூட்டங்களை நடத்துவது, கேள்வி நேரம் மற்றும் மசோதாக்கள் கொண்டு வருதல் குறித்து ஆலோசனைகள் வழங்கும்.



இக்குழுவில் இடம் பெற்றிருப்பவர்கள் வருமாறு:-

1. தயாநிதி மாறன், 2. சுதீப் பாண்ட்யோபாத்தியாயா, 3.பி.பி. சௌத்திரி, 4.லாவு ஸ்ரீ கிருஷ்ணா தேவராயலு, 5.ஸ்ரீ கௌராவ் கோகாய், 6.டாக்டர் ரிஷி காண்ட்துபே, 7.டாக்டர் சஞ்சய் ஜெய்ஸ்வால், 8.ஸ்ரீ டிலேஸ்வரர் காமெய்ட், 9.ஸ்ரீபர்ட்ரு ஹரி மெஹ்தாப், 10.ஸ்ரீ பாய்ஜாயந்த் பண்டா, 11. ஸ்ரீ அரவிந்த் கன்பத் சாவண்ட், 12.ஸ்ரீ கொடிக்குன்னில் சுரேஷ், 13.ஸ்ரீ அனுராக்சிங் தாக்கூர், 14.ஸ்ரீ லால்ஜி வர்மா.

இக்குழுவின் தலைவராக மக்களவைத் தலைவர் ஓம்பிர்லா செயல்படுவார் என்று மக்களவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

## விமான சேவை சீரமைப்பு !

புதுடெல்லி, ஜூலை 21–

Crowd Strikeன் இணைய பாதுகாப்பு கோளாறால் மைக்ரோசாஃப்ட் சேவையில் நேற்று முன்தினம் (ஜூலை19) உலகம் முழுவதும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் 1,400 விமானங்கள் ரத்து செய்யப்பட்டது. 3,000க்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாக இயக்கப்பட்டன. இதனால் பயணிகள் கடும் அவதியடைந்தனர்.

இந்த நிலையில் மைக்ரோசாஃப்ட் பிரச்சினைக்கு தீர்வு காண CrowdStrike மற்றும் தொழில்துறையினர் தீவிரமாக பணியாற்றி வருவதாகவும், வாடிக்கையாளர்களின் கணினிகளை பாதுகாப்பாக மீண்டும் செயல்பட வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மைக்ரோசாஃப்ட் சி.இ.ஓ. சத்யநாதெல்லா தெரிவித்தார். இதனையடுத்து இந்தியாவில் நேற்று அதிகாலை முதல் விமானப் சேவை படிப்படியாக சீராகி வருவதாக விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.



கடலூர் துறைமுகம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழா நேற்று முன்தினம் நடந்தது. இதில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன் தலைமை தாங்கி, சொந்த செலவில் ரூ.2 லட்சம் மதிப்பில் குடிநீர் விநியோகத்திற்கு மின் மோட்டார், மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்கினார். போட்டிகளில் வென்ற மாணவியருக்கு பரிசு வழங்கி பேசினார். உதவித் தலைமை ஆசிரியர் அறிவழகன், மூத்த ஆசிரியர் பாலமுருகன் முன்னிலை வகித்தனர். உடன் ஆசிரியர் சுகிர்தரமணி தொகுத்து வழங்கினார். விழாவில் கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதிபெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், ஆசிரியைகள் ஆகியோர் பங்கேற்றனர்.


